**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.338/2024 நாள்-12.09.2025

**பி.வா.சா.2- ராமச்சந்திரன்**

**பி.வா.சா.2-ன் குறுக்குவிசாரணை வாதி தரப்பில்**

வாதியின் அப்பாவும் என்னுடைய அம்மாவும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். வாதியின் அப்பா உயிருடன் இருக்கும்வரை இரு குடும்பத்திற்கும் இடையே நல்ல உறவு இருந்தது என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி எனக்கு துரத்து உறவினர். 1ம்பிரதிவாதி எனக்கு நெருங்கிய உறவினர் என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதியின் அப்பா 1ம்பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத் கிரைய ஆவணம் மோசடியான பெயரளவிலானது என்று வழக்குதாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி வாதியின் அப்பாவிடம் சொத்தை கிரையம் வாங்கிய விவரம் தெரியும். சொத்தானது வாதியின் அப்பாவிற்கு பாத்தியப்பட்டதா அல்லது வாதிக்கு பாத்தியப்பட்டதா என்று எனக்கு தெரியும். முதலில் தாவா சொத்து பிரியாவிற்கு பாத்தியப்பட்டிருந்தது பின்னர் பிரியா அவரது அப்பாவிற்கு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்தின் பெயரில் வாதியின் அப்பா 1ம்பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக் கொடுத்தார் என்ற விவரம் தெரியும். இந்த விவரங்களை நான் 1ம்பிரதிவாதியிடம் இருந்து சொத்தை கிரையம் வாங்கும்போது எனக்கு தெரியும். சொத்தை கிரைய வாங்குவதற்கு முன்பாக நான் வில்லங்கச் சான்றிதழ் எடுத்துப்பார்த்தேன். அந்த வில்லங்கச் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வில்லங்கச் சான்றிதழில் கண்ட மூல ஆவணங்களை நான் 1ம் பிரதிவாதியிடம் பெற்று படித்துப்பார்ர்த்து தெரிந்துகொண்டேன். வில்லங்கச் சான்றிதழில் கண்ட மூல ஆவணங்களை நான் இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வில்லங்கச் சான்றிதழில் கண்ட மூல ஆவணங்களில்

என்னென்ன ஆவணங்களை பார்த்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. கிரைய முடிப்பதற்கு முன்பாக 1ம் பிரதிவாதியிடம் நான் கிரைய ஒப்பந்தம் எதுவும் செய்யவில்லை. கிரைய முடித்த 2017 ம் ஆண்டு மார்ச் மாதத்தில் கிரையம் முடிப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பாக இடம் மற்றும் ஆவணங்களை பார்த்து கிரையம் முடித்தேன். கிரைய தொகையை நான் வங்கி மூலமாக செலுத்தினேனா என்றால் ரொக்கமாக கொடுத்தேன். 1ம் பிரதிவாதி கிரையம் முடிக்கும் போது சொத்தின் மூல ஆவணங்களை நான் வாங்கவில்லை நகல் மட்டும் தான் பார்த்தேன் அசல் ஆவணம் தொலைந்து போனதாக சொன்னார். தொலைந்து போன ஆவணங்களில் நகலினை நான்எடுத்துப் பார்த்தேனா என்றால் ஆவணங்களின் நகல் எடுக்கவில்லை. அசல் ஆவணங்கள் இல்லாமல் எவ்வாறு கிரையம் பதிவு செய்யப்பட்டது என்றால் ஆவணம் தொலைந்ததாக குறிப்பிட்டு கிரையம் பதிவு செய்யப்பட்டது. நான் பெற்ற கிரைய ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய அசல் பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் எதுவும் இல்லை. பிவாசாஆ.10 நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் நகல் என் றால் சரிதான். பி.வா.சா.ஆ.10 ல் சொத்தின் மார்க்கெட் மதிப்பு ரூ4,57,305/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் கிரைய மதிப்பு ரூ2,95,000/- என்று தான் குறிப்பிட்டு கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அசல் ஆவணம் தொலைந்துவிட்டதாக 06.03.2017 ல் புகார் கொடுத்த புகார் மனு இரசீது பி.வா.சா.ஆ.10 வுடன் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இரசீதும் உண்மை நகல் என்று குறிப்பிடப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகார் மனுவில் 20.2.2017 அன்று சாந்தி தியேட்டர் அருகில் வைத்து 1ம் பிரதிவாதி கிரைய ம் பெற்ற கிரைய ஆவணத்தின் அசல் தொலைந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ.10 ல் ஒரு பொது அறிவிப்பு நாளிதழ் விளம்பரம் வழக்கறிஞர் மூலமாக

கொடுத்தாக 06.03.2017 ம் தேதியிட்டு ஆவணம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.10-வுடன் 06.03.2017 ம் தேதியிட்டு இராஜபாளையம் தெற்கு காவல் நிலைய ஆய்வாளர் சான்றிதழ் வழங்கியுள்ளர் என்றால் சரிதான். அன்றைய தேதியில் புகார் கொடுத்து அன்றைய தேதியிலேயே காவல் ஆய்வாளர் ஆவணத்தை கண்டுபிடிக்க முடியவில்லை என்று சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக பி.வா.சா.ஆ.10 இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிவாசாஆ.10 வுடன் பொது விளம்பர நாளிதழ் , புகார் மனு இரசீது, காவல் ஆய்வாளர் வழங்கி சான்றிதழ் அசல் ஆகியவை இணைக்கப்ட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் ஆவணத்தை பாத்தால் தான் கூறமுடியும். பிவாசாஆ.10 வுடன் பொது விளம்பர நாளிதழ் , புகார் மனு இரசீது, காவல் ஆய்வாளர் வழங்கி சான்றிதழ் ஆகியவற்றை நானும் 1ம் பிரதிவாதியும் உற்பத்தி செய்து கிரையம் பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் எழுதிக் கொண்ட கிரைய ஆவணம் மோசடியான பெயரளவி லான கிரைய ஆவணம் என்றால் சரியல்ல. வாதிக்கு அவரது அப்பாவிற்கும் இடையே பிரச்சனை இருந்த விவரம் தெரியுமா என்றால் பிரச்சனை இல்லை. வாதிக்கு உலக விவரம் தெரியாமல் இருந்த போது அவரின் அப்பாவிற்கு ஒரு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. பின்னிட்டு வாதிக்கும் அவரது அப்பாவிற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதின் காரணமாக 1ம் பிரதிவாதியின் பெயருக்கு மோசடியாகவும், பெயரளவிலும் ஒரு கிரைய ஆவணம் உற்பத்தி செய்து வைத்தார் என்றால் சரியல்ல. மோசடியாகவும், பெயரளவிலான ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணத்தின் அடிபப்டையில் தான் 1ம் பிரதிவாதி என் பெயருக்கு கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. வாதி அவரது அப்பாவிற்கு எழுதிக்கொடுத்த பொது அதிகாரஆவண்தததைமுன்பு படித்துப்பாத்ததேன் . தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த பொது அதிகார ஆவணத்தில் வாதியின் அப்பா சொத்தை

கிரையம் கொடுப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்று வாசகங்கள் இருந்ததா என்றால் நான் படித்துப்பார்க்கும் போது கியைர கொடுப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த பொது அதிகார ஆவணத்தில் வாதி எந்த வித அதிகாரமும் கொடுக்கவில்லை என்றும், பொது அதிகார ஆவணத்தில் சொத்தின் விவரமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வாதியின் சொத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் நானும், 1ம் பிரதிவாதியும் பி.வா.சா.ஆ.10 கிரைய ஆவணம் உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்திற்கான அசல் மூல ஆவணங்கள் வாதியின் வசம் தான் இருந்தது என்று இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனால் என்னுடைய கியைரம் நல்லெண்ணத்தின் பெயரில் பெறப்பட்ட கிரையம் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்று',ம வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,

இராஜபாளையம்.